# சர்வவியாபி

MISSION PRESS 1840

SARVAVIABI

| 13-05-2018 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விளம்பி வருடம் சித்திரை 30 | வருட சந்தா ₹ 150<br>தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

| புத்தகம் 112<br>பக்கம் - 12 | இதழ்<br>18 | e-mail:missionpress48@gmail.com<br>e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/<br>2334360 | ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச் |
|---|---|---|---|---|


# “மரியா திருச்சபையின் அன்னை”





***(நமது பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர் அவர்கள் தமது உயர் மறைமாவட்ட செய்தி மடலில், 11-2-2018-இல் திருத்தந்தை அவர்கள் நிறுவிய “மரியா திருச்சபையின் அன்னை” எனும் விழா குறித்து வழங்கும் கருத்துகளை இங்கு வழங்குகிறோம்.)***

### *“மரியா, திருச்சபையின் அன்னை”*

தொன்றுதொட்டு கத்தோலிக்கத் திருஅவையில் புனித கன்னிமரியா பக்தி முயற்சியில் இருந்து வரும் மரியா திருச்சபையின் அன்னை எனும் நம்பிக்கையை உரோமை நாள் காட்டியில் இணைக்க வேண்டும் எனும் ஆணையை திருத்தந்தை வெளியிட்டார். இந்த ஆண்டிலிருந்து, பெந்தகோஸ்து விழாவுக்கு அடுத்த நாள் திங்கள்கிழமை அன்று இது கட்டாய நினைவாக கொண்டாடப்படும்.

***புனித கன்னிமரியா லூர்து நகரில்*** காட்சி அளித்த 160-ஆம் ஆண்டு நிறைவு நாளாகிய 11-2-2018 அன்று திருத்தந்தை வழங்கிய ஆணையினை, திருவழிபாடு மற்றும் திருஅருள்சாதன ஒழுங்குபடுத்தும் பேராயம் நடைமுறைப் படுத்தியது. இதன்மூலம், “புனித கன்னிமரியா, திருஅவை யின் அன்னை” எனும் கட்டாய நினைவு உரோமை பொது நாள் காட்டியில் இணைக்கப்படுகிறது.

“***மரியா, திருச்சபையின் அன்னை***” எனும் பணியினை அன்னை மரியா அவர்கள், சிலுவையினடியில் திருத்தூதர் யோவானை தம் மகனாகவும், அனைத்து நம்பிக்கை கொண்டோரையும் தம் பிள்ளைகளாகவும் ஏற்றுக்கொண்ட பொழுதே தொடங்குகிறார்கள் (காண். யோவா.10:25-27). இரண்டாம் வத்திக்கான் சங்கம் தனது “திருச்சபை” எனும் கோட்பாட்டுக் கொள்கை (இயல்.7) யில் “கிறிஸ்துவின் மற்றும் திருச்சபையின் மறைபொருளில்” மரியாவின் திருபிரசன்னம் இருப்பதை தெளிவாக விளக்கு கிறது. மீட்பின் வரலாற்றில் மரியா மிகச் சிறப்பான அங்கம் வகிக்கிறார். திருத்தந்தை ஆறாவது பவுல் அவர்கள் 21-11-1964-இல் “திருச்சபை” கோட்பாட்டுக் கொள்கையைப் பிரகடனப் படுத்திய பொழுதே, மரியாவுக்கு “திருச்சபையின் அன்னை” எனும் பெயர் சூட்ட விரும்பினார்.

**இறைமக்கள் கடந்த இரண்டாயிரம் ஆண்டளவாக** அன்னை மரியாவின் பேரில் பிள்ளைகளுக்குரிய பாசத்தை யும் பக்தியையும் வளர்த்து வந்துள்ளனர். திருச்சபைத் தந்தையர்களும் புனிதர்களும் கிறிஸ்து மற்றும் திருச்சபை மறையுண்மைகளில், மரியாவின் பிரசன்னத்தை நிரம்ப தியானித்து வந்தனர். மரியா அரசி என்பதைவிட அவர்கள் ஓர் அன்னை என்பதே மிகவும் குறிப்பிடும் வகையில் அமைந்திருக்கிறது என்று குழந்தை யேசுவின் புனித தெரெசா கூறுகிறார்.

1975-இல் திருத்தி அமைக்கப்பட்ட உரோமைத் திருப்பலி நூலில், விருப்பத் திருப்பலிக் கொண் டாட்டங்களில் “மரியாவின் திருச்சபைத் தாய்மை” இடம் பெறுகிறது. புனித திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் அவர்களின் திருஆளுகைக் காலத்தில் (1980), லொரேட்டோ அன்னை மன்றாட்டு மாலையில் “மரியா திருச்சபையின் அன்னை” எனும் மன்றாட்டு இணைக்கப் பட்டது.

***நசரேத்தில், தூய ஆவியாரின்*** வல்லமையால் மரியா இயேசுவை தம் திரு உதரத்தில் கருவாகத் தாங்கினார். அவர் ஆண்டவரைச் சுமந்தவாறு, விரைந்து சென்று, எலிசபெத்தை யும் திருமுழுக்கு யோவானையும் சந்தித்தார் (காண். லூக்.1:39). நற்செய்தியை முதல்முதல் பெற்றவர் மரியா; அவர்தான் முதன் முதலாக நற்செய்தியை அறிவித்தவர். பெந்தகோஸ்து நாளில் திருத்தூதர்களும், சீடர்களும், பெண்களும் மரியாவுடன் மரியாவைப்போல் செபித்துக் கொண்டு இருந்தனர். அவர்கள் அனைவரும் தூய ஆவியா ரால் நிரப்பப்பட்டனர்; நற்செய்தி அறிவிக்கத் தொடங்கினர்.

***திருச்சபையின் மறைப்பணி*** பெந்தகோஸ்து நாளில் தொடங்குகிறது.நற்செய்தி அறிவிப்பு திருச்சபைக்கே உரிய அழைத்தல். நற்செய்தி அறிவிக்கவே திருச்சபை இருக்கின் றது (Evangelii Nuntiandi. எண்.14). மரியா, திருச்சபையின் அன்னை எனும் கட்டாய நினைவு மிகச் சிறப்புமிக்கதாக அமைந்துள்ளது.

→ அன்னை மரியாவுடனும் அவரைப் போலவும் நற்செய்திப் பணியாற்ற நாம் அழைக்கப்படுகிறோம்.

→ அன்னை மரியாவுடனும் அவரைப் போலவும், இந்தியத் திருஅவை ஆண்டவர் இயேசுவை இந்தியாவின் இதயத்திற்கு எடுத்துச் செல்லவும், இந்தியாவை இயேசு வின் பாதத்திற்கு அழைத்து வரவும் அழைக்கப் படுகிறது.

→ அன்னை மரியாவுடனும் அவரைப்போலவும், நாம் அனைவரும் இரக்கமும் கருணையும் கொண்டவர் களாக இருக்க வேண்டும். நமது அன்பு, பாசம், கரிசனம், அக்கறையை அனைவருக்கும் குறிப்பாக ஏழைகள் மற்றும் விளிம்பு நிலையினருக்கு வெளிப் படுத்த வேண்டும்.

**திருஅவையின் அன்னை மரியா!**
**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!!**

(- நன்றி.புதுவை-கடலூர் உயர் மறைமாவட்ட செய்திமடல், மே - 2018.
- தமிழாக்கம் ஆசிரியர்.)

ஆசிரியர் பேனா...

# "நீட் தேர்வு சங்கடங்கள்"

**மேல்நிலைப்பள்ளி ஆண்டிறுதித் தேர்வில்** சிறந்த மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும், மருத்துவத் துறையில் மேற்படிப்புக்குச் செல்லும் மாணவ மாணவியர், தங்கள் தகுதி நிரூபிக்கும் மற்றும் நுழைவுத் தகுதி தேர்வில் National Eligibility Cum Entrance Test - தேர்ச்சி பெற்ற பிறகே அவர்களுக்கு இடம் ஒதுக்கப்படும் என்பதை கட்டாயமாக்கி இருக்கிறது இன்றைய அரசு. அதன்படி CBSE - Central Board for Secondary Education என்னும் மத்திய இடைநிலை கல்வி வாரியம் இத்தேர்வினை கடந்த ஆண்டு தொடங்கியது. அப்பொழுதே தமிழகத்தில் கடும் எதிர்ப்பை சந்தித்த NEET தேர்வு இந்தாண்டு மாணவர்களையும் பெற்றோரையும் அலைக்கழித்துச் சென்றுள்ளது.

**கடந்த ஆண்டு 11,38,890** மாணவர்கள் தேர்வெழுதி, 6,11,539 பேர் தேர்ச்சி பெற்றனர். இவ்வாண்டு 13 இலட்சம் மாணவர்கள் நீட் தேர்வுக்கு விண்ணபித்தனர். தமிழகத்திலிருந்து விண்ணப்பித்தவர்கள் 1,07,288 பேர். 170 தேர்வு மையங்களை CBSE தமிழகத்தில் அமைத்தது. CBSE -இன் திட்டகுளறுபடிகளினால், 5,500 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற அண்டை மாநிலங்களுக்கு செல்ல வேண்டி வந்தது; சிலர் ராஜஸ்தான், சிக்கிம் போன்ற தூரப் பிரதேசங்களுக்கும் செல்ல வேண்டி வந்தது. சிரமங்களை முன்னுணர்ந்த ஊடகங்கள், இது CBSE-இன் துன்பவியல் மகிழ்வு கலாச்சாரம் என சுட்டிக்காட்டிய போதும், CBSE பல காரணங்களைக் காட்டி பின் வாங்க மறுத்தது. தன்னார்வலர்களின் விண்ணபத்தின் பேரில், சென்னை உயர்நீதிமன்றம் கூடுதல் மையங்கள் அமைக்க உத்தர விட்டபோது, CBSE உச்சநீதிமன்றம் சென்றது. கடைசி நேரத்தில் வழக்கை கையிலெடுத்த உச்ச நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை ரத்து செய்து, மே 6, ஆம் தேதி திட்டமிட்டபடி தேர்வு நடத்த உத்தரவிட்டது. அதிர்ச்சியுற்ற மாணவர்களும் பெற்றோரும் மிகுந்த இன்னலுக்கு ஆளானார்கள். மிகக் குறுகிய நேரம், பயண சிரமம், நேரத்தோடு மையத்துக்கு போக வேண்டுமே என்ற மன உளைச்சல், துணைக்கு இன்னொருவர் உடன் பயணிக்க வேண்டும், சிலர் ஆயிரம் கி.மீ. க்கும் அதிகமாக பயணிக்க வேண்டிய நிர்ப்பந்தம், பயணச் செலவு இவற்றால் அதிகம் பாதிக்கப்பட்டது மாணவ மாணவியரே.

**பயணக் கட்டணம்,** பயணப்படி ரூ.1000,- அரசு வழங்க முன்வந்தது, தன்னார்வலர்களின் உதவி, சில அமைப்புகளின் ஆதரவு ஆகியன உறுதி செய்யப்பட்டாலும் கிராமத்து மாணவர்களும், ஏழை மாணவர்களும் சந்தித்த இன்னல்கள் சொல்லி மாளாது. இத்தகைய சிரமங்கள் இளம் உள்ளங்களில் ஆறாத காயங்களாகும் என்பதை நீதித்துறையும் கல்வித்துறையும் சிந்திக்காதது வியப்பே. திருவாரூர் மாவட்ட கிருஷ்ணசாமி (46) தன் மகன் கஸ்தூரி மகாலிங்கத்தை கேரளா, எர்ணாகுளம் அருகில் தம்மணம் ஊரில் நாளந்தா பப்ளிக் பள்ளியில் நீட் தேர்வு மையத்துக்கு அழைத்துச் சென்ற வேளை, மகன் தேர்வில் இருக்கும்போது, விடுதி அறையில் மாரடைப்பு ஏற்பட்டு இறந்த செய்தி பொதுமக்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. NPSC எனப்படும் தேசிய ப்பளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு 21 இலட்சம் பேருக்கு தேர்வு மையம் அமைக்க இயன்ற அரசு, 13 இலட்சம் பேருக்கு தாராளமாக மையங்களை அமைத்திருக்க இயலும். தமிழகத்தில் ஒரு லட்சம் பேர் மட்டுமே. இதெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, நாளிதழ்களில் CBSE இன் துன்பியல் மகிழ்வு உணர்வு என்று வெளியானது சரிதான் என எண்ணத் தோன்றுகிறது. கடந்த ஓராண்டளவாகவே, ஒரு மாணவியின் இறப்புக்குப்பின் கூட, நீட் பற்றிய சரியான புரிதலோ, திட்ட வரைவுகளோ இல்லாமல் போனதுதான் பெரும் பிரச்சினைகளை உருவாக்கியது. சில ஆண்டுகளுக்குமுன் நீட் தமிழகத்துக்கு தேவையில்லை சொந்த மாநிலத்தில் என்ன, எங்கு குறித்தாலும் நீட் எழுதினால்தான் சீட் என்ற கட்டாயத்தை உருவாக்கியது அரசியல் சமூக தளங்கள். எதிர்கால வாழ்வை தவறவிடக்கூடாதே என்று மாணவர்களும் பெற்றோர்களும் பல இன்னல்களை சந்திக்க வேண்டியதாயிற்று. இவ்வாண்டு "நீட்" மிகக் கசப்பான அனுபவத்தை பதித்திருக்கிறது.

- பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ மாணவியைக்கூட பெற்றோர், குழந்தை என்றே சொல்கின்றனர். அந்த "டீன்ஏஜ்" ல் மனப்பக்குவம், துணிவு, முடிவெடுக்கும் திறன் நாம் நினைக்கும் அளவு இருப்பதில்லை. இத்தகைய இளம் நெஞ்சங்களில் காயங்களை பதிக்கும் இத்தகைய நிகழ்வுகள் இவர்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும்.
- மாநில, சமூக சூழலை மனதில் கொண்டு நீதித்துறையும், கல்வித்துறையும் செயலாற்றி இருக்க வேண்டும். நீட் தேர்வுக்கு முன்னும் பின்னும் இந்த இரு துறைகளும் செயல் பட்ட விதம், மக்கள் மனதில் நம்பிக்கை குறைய வாய்ப்பாகிவிட்டது.
- ஏற்கெனவே CBSE விதிமுறைகள் தெளிவாக அதே வேளையில் கடுமையாக அறிவிக்கப்பட்டிருப்பினும், தேர்வு எழுத விண்ணப்பித்த பின் மாணவ மாணவியர் முழு ஒத்துழைப்புத் தர வேண்டும். தேர்வு அதிகாரிகளும் மாணவ மாணவியரின் மத, சமூக, தன்மான, தன்னுரிமை, மனித மாண்பு உணர்வுகளை மதிக்க வேண்டும். தொழில்நுட்பம் வளர்ந்துள்ள இக்கால கட்டத்தில், இத்தகைய தேர்வு முறைகளை மாற்றியமைக்கவும், விழிப்புணர்வு தரவும், இலகுவாக நடைமுறைப்படுத்தவும் உரிய அதிகாரிகள் முன்வர வேண்டும். ஒட்டுமொத்த ஒரு குழுவை, மாநிலத்தை, மக்களை சிரமத்திற்கு ஆளாக்குவது பெரும் சந்தேகத்தையும் விரக்தியையும் உருவாக்கும்.
- வாட்ஸ் அப்-இல் பல வித செய்திகள் வலம் வந்தாலும், இது மக்களின் உணர்வு என்பதை உரியவர்கள் ஏற்க வேண்டும். ஒரு மூன்று மணி நேர தேர்வுக்கு ஆயிரம் கி.மீ., மூன்று நாள் பயணம், நேர நெருக்கடி போன்றவை மக்களை வேதனைக்கு உட்படுத்தி வித்தியாசமான கருத்துருவாக்கங்களை திணிக்கும் யுக்தியாகவே ஊடகங்கள் பார்க்கின்றன.

**இந்த தேசம்** அகிம்சையை வாழ்ந்த **காந்தியடிகள்**, கல்விக்கண் திறந்த கர்ம வீரர் **காமராஜ்**, தன்னை நாட்டு நலனுக்கே அர்ப்பணித்து வாழ்ந்த **அப்துல் கலாம்**, அன்புப் பணியில் தன்னையே கரைத்துக்கொண்ட **புனித அன்னை தெரேசா** போன்ற சான்றோர்களைக் கண்டு வந்திருக்கிறது.

இளம் உள்ளங்களை ஊக்குவித்து வளர்ப்பது வழி காட்டுவது நம் கடமை. அவர்களே வருங்கால இந்திய நாட்டின் நம்பிக்கை. ●

**புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டம்**
**இரண்டாவது கத்தோலிக்க அருங்கொடை மாநாடு**
**மாதாதொலைக்காட்சி குழுவினர் முன்னின்று நடத்தும்**
**"நம்பிக்கை மறுமலர்ச்சி பெருவிழா 2018"**

நாள் : 18, 19, 20 மே மாதம், 2018 (வெள்ளி, சனி, ஞாயிறு)
நேரம்: காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை
இடம்: **இம்மாகுலேட் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகம் (இணைப்பு);** (Dr.அம்பேத்கர் சாலை, உப்பளம், கல்லறை அருகில்).
வழி: புதுவை-கடலூர் சாலை, முதலியார்பேட்டை காவல்நிலைய பஸ் நிறுத்தம்.

**வழிநடத்துபவர்:** 1) அருட்பணி **டேவிட் ஆரோக்கியம்,** முதன்மை செயலாக்க இயக்குநர், மாதா தொலைக்காட்சி, சென்னை. 2) அருட்பணி **அதிரூபன்,** நிதி மேலாளர், மாதா தொலைக்காட்சி, சென்னை. 3) அருட்பணி. **இம்மானுவேல் மரியம்,** மாதா TV ஒருங்கிணைப்பாளர், சிவகங்கை. 4) சகோ. **ஷாஜீ,** இசைத்துறை, மாதா TV.

**அன்புடன் அழைக்கும்:** அருள்பணி **பீலோ**, இயக்குநர், தூயசவேரியார் மேய்ப்புப் பணி மையம், உப்பளம், புதுவை. மறைமாவட்ட அருங்கொடை இயக்கப் பணிக்குழு, புதுவை. மறைமாவட்ட நற்செய்தி அறிவிப்பு பணிக்குழு, புதுவை.

**தொடர்புக்கு:** 9443244787 / 9750365723 / 9842333363




தூய ஆவியாரின் பெருவிழா (20-05-2018) தி.பா.2:1-11 கலா.5:16-25 யோவா.15:26-27,16:12-15.

# “வழிகாட்டும் தூய ஆவியானவர்”

அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுவை.



ஒரு விமானம் 150 பேரை ஏற்றிக் கொண்டு வானில் பறந்துக் கொண்டிருந்தது. பாதி தூர பயணத்தில், விமானத்தில் சிறியக் கோளாறு ஏற்பட்டது. விமானி சரி செய்து விடுவார் என்று பணிப் பெண் சொன்னாள். நேரம் ஆக, ஆக விமானம் தனது கட்டுப்பாட்டை இழந்தது. அப்போது “அன்பு நிறை பயணிகளே, விமானத்தில் ஏற்பட்ட கோளாறை சரி செய்ய முடியவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் விமானம் வெடித்து சிதறப்போகிறது. எனவே பாராசூட்டை அணிந்துக் கொண்டு கீழே குதியுங்கள் என்று அறிவிக்கப்பட்டது.” அதில் மினரல் வாட்டர் கம்பெனி நடத்தும் தொழிலதிபரும் இருந்தார். அவர் பாராசூட்டை அணிந்து கொண்டு இறங்கிய பகுதி பாலைவனப் பகுதி. பார்த்தார். நான்கு திசையும் மணற்பரப்பு எங்கு செல்வது? எப்படி செல்வது? யார் வழிகாட்டுவது என்று யோசித்தார். அவருக்கு தண்ணீர் தாகமாக இருந்தது. பெரிய மினரல் வாட்டர் கம்பெனி வைத்திருந்தாலும் எனது தாகத்தை தணிக்க ஒரு டம்ளர் தண்ணீர் கூட இங்கு இல்லையே என்று தாகத்தோடு வழி தேடிக் கொண்டிருந்தார். சற்று நேரத்தில் ஒரு ஒத்தையடி பாதையைப் பார்த்தார். அது ஒரு மனிதனின் காலடிச்சுவடு. அதையே பின்தொடர்ந்து பாலைவன ஓரத்துக்கு வந்து ஒட்டகம் மேய்த்துக் கொண்டிருந்த ஒரு மனிதரைப் பார்த்து, அவன் தோல் பையில் வைத்திருந்த தண்ணீரை வாங்கி குடித்து தனது தாகத்தை தணித்துக் கொண்டார். பின்பு வழி கண்டுபிடித்து தனது ஊருக்கு சென்றார். வழி தவறிய இவருக்கு ஒத்தையடி பாதை வழிகாட்டியது போல, நம்முடைய வாழ்க்கைக்கும் வழிகாட்டி நம்மை அழைத்துச் செல்பவர் தூய ஆவியானவரே!

**பெந்தகோஸ்தே பெருவிழா:** ஆண்டவரின் உயிர்ப்பு பெருவிழாவைக் கொண்டாடி முடித்த பிறகு, இன்றைய ஐம்பதாவது நாளை தாய் திருஅவை தூய ஆவியின் வருகையை நினைவு கூர்ந்து கொண்டாடுகின்றது. இந்த விழா பெந்தகோஸ்தே பெருவிழா என்றும் அழைக்கப் படுகிறது. இந்த பெந்தகோஸ்தே பெருவிழா மிகப் பழமை யான, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விழாவாகும். ஆண்டவரின் உயிர்ப்பு பெருவிழாவிற்கும் இந்த திருவிழா விற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இந்தப் பெருவிழா வோடு மிக முக்கிய வழிபாட்டு காலமான பாஸ்கா காலம் முடிவுக்கு வருகிறது. கிரேக்க மொழியிலே “பெந்தகோஸ்தே” என்றால் 50 என்று பொருள். யூதர்கள் அறுவடை விழா என்று கொண்டாடினார்கள். அதாவது இஸ்ரயேல் மக்கள் செங்கடலை கடந்து விடுதலையான பிறகு பாஸ்கா விழாவை கொண்டாடிய பிறகு 50ம் நாள் அறுவடை விழா என்று கொண்டாடினார்கள். அப்பொழுது எருசலேம் நகரிலே பல்வேறு நாட்டினர், மொழியினர், இனத்தினர் ஒன்று சேர்வர். ஆனால் அந்த நாட்களிலே இயேசு இறந்ததால் யூதர்களுக்கு அஞ்சி, பயந்து இறுதி இராவுணவு உண்ட அதே அறையில் இருக்கும்போதுதான் அன்னை மரியாள் மற்றும் திருத்தூதர் கள் மேல் தூய ஆவியார் நெருப்பு போன்று நா வடிவில் அவர்கள் மேல் இறங்கினார்.

**சாட்சிய வாழ்வுக்கு...:** பலரும் கூறுவது பெந்த கோஸ்தே பெருவிழாவாகிய இன்றுதான் திருஅவை பிறந்தது என்று. ஆனால் கடவுள் எப்பொழுது இஸ்ராயேல் மக்களை ஆசீர்வதித்து தன்னுடைய இனமாக தேர்ந்தெடுத்தாரோ அப்பொழுதே திருஅவை உருவாகிவிட்டது. ஆனால் இன்றுதான் தூய ஆவியானவரால் திருஅவை சிறப்பாக அர்ச்சிக்கப்பட்டு, புதுப்பிறப்பாக, புதுப்படைப்பாக மாறியது. உயிருக்குப் பயந்து மறைந்து வாழ்ந்த சீடர்களுக்குத் துணிவு கொடுத்தவர் தூய ஆவியார். இயேசுவை விட்டு ஓடியவர்களை இயேசுவுக்கு சாட்சிகளாக நிலைநிறுத்தியவர் தூய ஆவியார். ஆண்டவர் இயேசு கிறிஸ்து உயிர்த்தார் என்பதற்கு மிகவும் முக்கியமான சாட்சிகள் இயேசுவின் சீடர்கள். கோழைகளாக அறைக்குள் அடைந்து கிடந்த திருத்தூதர்கள் தூய ஆவியால் நிரப்பப் பெற்று வீரர்களாக வீதிக்கு வந்தனர். புதியதொரு சமுதாயம் படைக்க, இதுவரை புரியாத புதிராக இருந்த இயேசுவின் வார்த்தைகள் (மாற்கு. 9:31-32, யோவா. 2:20-22, யோவா.12:16) அவர்களுக்குப் புரியத் தொடங்கின. ஏனெனில் அறிவுறுத்தும் ஆவியை அவர்கள் பெற்றிருந்தனர். இயேசுவின் மனநிலையே சீடர் களின் மனநிலையாக மாறியது. கொள்கை பிடிப்போடு இயேசுவின் மீட்புச் செய்தியை, மன்னிப்பின் செய்தியை, சமாதானத்தின் செய்தியை சீடர்கள் போதித்தார்கள். ஆவியால் நிரப்பப் பெற்று அயல்மொழிகளில் பேசினார்கள், புதுமை களை புரிந்தார்கள்.

**வழிகாட்டும் தூய ஆவியானவர்:** பல திருச்சபைகள், பல அரசுகள், பல நிறுவனங்கள் உருவாகின. ஆனால் அனைத்தும் அழிந்துபோயின. இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகியும் கத்தோலிக்க திருஅவை இருக்கிறது என்றால் அதற்கு தூய ஆவியாரின் செயல்பாடுகள் தான் காரணம். அருங்கொடை செபக்கூட்டம், உபவாச செபக்கூட்டம், திருவிழிப்பு,பௌர்ணமி, சிறப்பு மாநாடு போன்ற நிகழ்வுகளில் தான் தூய ஆவியார் சிறப்பாக பொழியப் படுபவராக மக்களின் மனங்களில் ஒரு மாயை உருவாக்கப்பட்டுள்ளது. எனவே கத்தோலிக்கர்களுக்கு தூய ஆவியார், ஒரு ‘திடீர் கடவுளாக’, ‘புதிய கடவுளாக’, ‘மறைந்த கடவுளாக’, ‘மறக்கப்பட்ட கடவுளாக’ காட்சியளிக்கின்றார். ஆனால் திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவர் உள்ளத்திலும் அவர் குடிகொண்டிருக்கிறார் என்றும், “தந்தை, மகன், தூய ஆவி” என்று செபிக்கும் போது அவர் நம்முள் பிரசன்னமா யிருக்கிறார். உடனிருக்கிறார், வழிநடத்துகிறார் என்பதை உணர வேண்டும் தூய ஆவியின் கொடைகளைப் பெற்ற வர்கள் சோதனைகளைக் கடந்து சாதனைகளைப் படைப்பார் கள் (லூக்.3:21-4:15). குழப்பம் வரும்போதெல்லாம் இயேசு வைத் தந்தையிடம் அழைத்துச் சென்றவர் தூயஆவியார். நம்முடைய வாழ்விலும் எது சரி, எது தவறு, எது நீதி, எது அநீதி, எது உண்மை, எது பொய் என்பதை நமக்கு சுட்டிக் காட்டுபவர் அதே ஆவியார். தொடக்க கால கிறிஸ்தவர் களிடத்தில் ஒரே மனம், ஒரே உள்ளம், கூடி செபித்தல், பகிர்தல் போன்ற அனைத்தையும் செயலாக்கம் பெறச் செய்தது தூய ஆவியின் ஆற்றலே. எனவேதான் அவர்கள் பொதுவுடமை நோக்கில், உறவுகளில் மேம்பாடு கண்டனர். குடும்ப உறவுகளில் தடுமாறும் மனிதனை, நல்வழிப்படுத்து வதும் தூய ஆவியாரே. அப்பொழுது குடும்பத்தில் அமைதி பிறக்கிறது. குடும்ப உறவுகளில் ஒற்றுமை நிலைக்கிறது. அன்றாட வாழ்வில் பல இன்ப துன்பங்களைச் சந்திக்கிறோம். வளர்ச்சியை நோக்கி பயணம் செய்யும்போது தடுமாற்றம், மேடு பள்ளங்கள். அப்படிப்பட்ட சூழலில் நமக்கு துணை செய்யும் ஒரே துணையாளர் தூய ஆவியார்தான். எனவே வாரும் தூய ஆவியாரே! வரங்கள், கனிகள், கொடைகள் அனைத்தையும் தந்து வழிநடத்தும். நாங்கள் சரியானதை சிந்திக்கவும், சொல்லவும், செய்யவும் அருள்தாரும். வழிகாட்டும் தூய ஆவியாரே என்று செபிப்போம்.



## இறங்கி வந்து நெருங்கி வந்த உறவு

ME

4

Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

நெருக்கமான உறவுக்குக் கூட்டிச் செல்லும் வழிகள் மூன்று. 1) பேச்சு 2)காட்சி 3)தொடுதல்.

**1) பேச்சு:** நம்மிடம் ஒருவர் தன் வார்த்தையால் தன் அன்பை வெளிப்படுத்தாத வரை அவர்கள் நம்மை அன்பு செய்கிறார்கள் என்று எப்படித் தெரியும்? பேச்சு என்பது ஆன்மாவின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். நம் செபங்கள் எல்லாமே "எனக்கு இதைக் கொடு, அதைக் கொடு" என்பதாகவே அமைந்துவிடக் கூடாதல்லவா?

இயேசு தெளிவாகக் கூறிவிட்டார்: "நீங்கள் கேட்கும் முன்னதாகவே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார்" (மத் 6:8) அதே சமயம் "கேளுங்கள் கொடுக்கப்படும்" என்றும் கூறியிருக்கிறார். அதுமட்டுமல்ல தொடர்ந்து தொல்லை கொடுத்துக் கேட்பதை ஓர் உவமையில் கூறியிருக்கிறார். நள்ளிரவில் தன் நண்பனிடம் சென்று ரொட்டி கடனாகக் கேட்கும் உவமை... நண்பன் கொடுக்க மறுத்தும் கூட மற்ற நண்பன் தொடர்ந்து தொல்லை கொடுக்கிறான். இதில் இயேசு கூற விரும்புவது உறவில் இருக்க வேண்டிய உரிமை.

இறைவனோடு மனிதர் கொள்ளும் உறவில் உரிமையும் உறவும் இணைந்து செல்கின்றன. அப்படியானால் இயேசுவிடம் எதைப்பற்றிப் பேசுவது?: நினைப்பதை, உணர்வதை, புரிந்துகொண்டதை, புரிந்துகொள்ள முடியாததை, தெரியாததை, தெரிந்துகொள்ள விரும்புவதை, தீட்டியிருக்கும் திட்டங்களை, இப்படி எதைக் கடவுளிடம் சொல்ல வேண்டும், எதைச் சொல்லக் கூடாது என்று தடை ஏதுமின்றி பேசலாம். தொடக்கக்காலத் திருஅவையில் திருத்தூதர்கள் தூய ஆவியும் நாங்களும் கலந்தாலோசித்தோம் என்று கூறுகிறார்கள். அப்படியானால் ஒரு மனிதரைக் கலந்தாலோசிப்பதுபோல தூய ஆவியாரையும் கலந்தாலோசிக்க முடியும். நமக்குப் பல காரியங்களில் தூய ஆவியாரின் ஆலோசனை தேவை.

சில சமையங்களில் நாம் செய்ய இருக்கும் ஒன்றைப் பற்றி ஆலோசனை கேட்டால் (குறி பார்ப்பது போல அல்ல) அவர் நமக்கு எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்ய வேண்டாம் என்று தூண்டுதல் தருவார். உதாரணமாக "பின்பு ஆசியாவில் இறைவார்த்தையை அறிவிக்காதவாறு தூய ஆவியார் தடுக்கவே அவர்கள் பிரிகிய, கலாத்தியப் பகுதிகளைக் கடந்து சென்றனர். அவர்கள் மீசியா அருகே வந்து பித்திஸியாவுக்குச் செல்ல முயன்ற போது இயேசுவின் ஆவியார் அவர்களை அங்கு போகவிடவில்லை." (தி.ப. 16:6-7) தூய ஆவியாரின் தோழமையில் வாழ்பவர்களுக்கு இவை புரியும்.

நமது செபங்கள் நம்மைக் கடவுளுக்கு வெளிப்படுத்துவதில்லை, நமக்கேதான் நம்மை வெளிப்படுத்துகின்றன. ஒருவர் பேசுவதைக் கேட்டாலே போதும் அவர்கள் எவ்வளவு பணிவும் பண்பாடும் உள்ளவர்கள் அல்லது தற்பெருமை உள்ளவர் என்றெல்லாம் நாம் மதிப்பிடுகிறோம். அவ்வாறே நம்முடைய செபங்களை வைத்து நம்மையே நாம் மதிப்பிட முடியும், மதிப்பிட வேண்டும்.

பேசிய வார்த்தகள் மட்டுமல்ல எழுதிய எழுத்துக்களும் காலங்கடந்தும் நம்மோடு பேசக் கூடியவை. சாக்ரடீஸ் உடைய வார்த்தைகளை வாசிக்கும்போது இன்றும் அவை நமக்கு ஞானத்தைப் போதிக்கின்றன. காந்தியடிகளின் "சத்திய சோதனை" என்னும் நூலை வாசிக்கும்போது அவருக்குச் சத்தியத்தின் மீதுள்ள பற்றும் அவருடைய நேர்மையும் நம்மையும் பற்றிக்கொள்கின்றன.

இயேசுவைப் பொருத்த மட்டில் அவர் எந்த நூலோ கட்டுரையோ எழுதியதில்லை. ஆனாலும் அவருடைய போதனை பற்றி எழுதப்பட்ட நூல்களைப் போல இதுவரை யாரைப்பற்றியும் எழுதப்பட்டதில்லை. அவர் எந்த உருவப்படமும் வரைந்ததில்லை. ஆனால் அவரைப் பற்றிய படங்களுக்கு எண்ணிக்கையே இல்லை. அவரைப் பற்றிய நூல்களை எல்லாம் எழுத பெரும்பாலும் தூண்டுதல் அளித்தது நற்கருணையே. புனித தாமஸ் அக்குய்னாஸ் முதல் அமெரிக்க கர்தினால் புல்டன் ஜே ஷீன் வரை எத்தனை எத்தனையோ பெரும் இறைஇயல் வல்லுநர்கள் நற்கருணை முன்பு பல மணி நேரம் செலவிட்டுத் தியானித்ததன் பலனாக நற்கருணை நாதரோடு நெருக்கமான உறவு வைத்திருந்தார்கள். புனித தாமஸ் அக்குய்னாஸ் நற்கருணை பற்றி எழுதிய மிக அழகான பாடல் நற்கருணை பவனியின்போது பாடப்படுகிறது. இதைப் போன்ற வேறு அருமையான பாடல் இதுவரை எழுதப்படவில்லை.

மேலும் நற்செய்தியை ஓர் அறையிலிருந்து வாசிப்பதற்கும் நற்கருணை முன் அமர்ந்து இயேசுவைப் பிரசன்னப்படுத்தி வாசிப்பதற்கும் வேறுபாடு உண்டு. அப்போது அவர் தனிப்பட்ட முறையில் நமக்கெனவே பேசுகிறார். ஒரு சில வாக்கியங்களைப் பல முறை வாசித்திருப்போம் அல்லது வாசிக்கக் கேட்டிருப்போம். ஆனால் அப்போதெல்லாம் நம்மைக் கவராத ஒரு வார்த்தை திடீரென வேறு ஒரு நாள் நம் உள்ளத்தை ஈர்க்கும். அந்த நேரங்களில் இயேசு நம்மோடு பேசுகிறார்.

கடவுள் மனித இதயத்தோடு பேசினால் இதயத்தில் இருந்து பிறப்பது அன்புதானே. அவருடைய அன்பின் மொழியைப் புரிந்துகொள்வோம்.

"நான் அவளை நயமாகக் கவர்ந்திழுப்பேன். பாலை நிலத்துக்கு அவளைக் கூட்டிப்போவேன். நெஞ்சுருக அவளுடன் பேசுவேன்." (ஓசே 2:14). கடவுளுடைய வார்த்தையை இறைவெளிப்பாடு என்கிறோம். விவிலியத்தின் எந்தப் பக்கத்தைத் திறந்தாலும் கடவுளின் குரலைக் கேட்கலாம். "உனக்கு நான் முடிவில்லாத அன்பு காட்டியுள்ளேன். எனவே பேரன்பால் உன்னை ஈர்த்துள்ளேன்" (எரே31:3)

"உங்கள் பாவங்கள் கருஞ்சிவப்பாய் இருக்கின்றன. எனினும் உறைந்த பனி போல அவை வெண்மையாகும். இரத்த நிறமாய் அவை சிவந்திருக்கின்றன. எனினும் பஞ்சு போல் அவை வெண்மையாகும்." (எசா 1:18)

இவ்வாறு விவிலியத்தின் பக்கங்கள் எல்லாம் கடவுளின் வார்த்தையைப் பேசிக்கொண்டே இருக்கும். அதைக் கேட்கும் நமக்கு வியப்பு ஏற்படும்: "அன்பு இதை எல்லாம் செய்யக் கூடுமா" என்று கேட்கத் தோன்றும். - தொடரும்

## தேடலில் கிடைத்த முத்து

Times of India ஏப்ரல் 27, 2018 ஒரு செய்தியை வெளியிட்டது: "காணாமற்போன தமிழ்த் திரைப்படச் சுருள்களைத் தேடலில்..." 1916-இல் நடராஜ முதலியார் "கீச்சக வாதம்" என்னும் திரைப்படத்தை வெளியிட்டார். அதுவே தென் இந்தியாவில் வெளிவந்த முதல் மௌனத் திரைப்படமாகக் கருதப்படுகிறது. தேசிய திரைப்பட ஆவணங்களின் இயக்குனரான Prakash Magdum என்பவர் Sugeeth Krishnamurthi என்பவருடன் இணைந்து காணாமற்போன தமிழ்த் திரைப்படச் சுருள்களைத் தேடியுள்ளனர். அதில் கிடைத்தது: Paris Foreign Missions (MEP) சபையைச் சேர்ந்த அயர்லாந்து குரு Fr. Thomas Gavan Duffy R.S. Prakash என்பவருடன் சேர்ந்து 1923-இல் "The Catechist of Kil-Arni" என்னும் மௌனப் படத்தை இயக்கியுள்ளனர். இந்தப் படம் புதுச்சேரியில் உள்ள MEP பணிக்கு நிதி திரட்ட எடுக்கப்பட்டது. இதன் பிரதியை NFAI (National Film Archives of India) பாதுகாத்து வருகிறது. எனவே இன்றும் அதன் பிரதியைப் பெற வாய்ப்புண்டு. இன்றுபோல அன்று ஊடக வசதிகள் இல்லாத காலத்திலேயே இந்த மாபெரும் முயற்சியை மேற்கொண்ட தந்தை கவான் டஃபியை தமிழகம் பாராட்டுகிறது. பொதுநிலையினரான ஒரு கத்தோலிக்கரும் திரைப்படங்களுக்குத் தொடக்கத்திலேயே உதவியவர் சாமிக்கண்ணு வின்சென்ட் என்பவர். இவர் தன் சொந்த ஊரான கோயம்புத்தூரில் சினிமா இல்லத்தை நிறுவியவர். இதுவே இந்தியாவின் முதல் திரையரங்கம்.

(தொகுத்தவர் அருட்சகோதரி லில்லி மரி ME)



# ஆவியில் இயங்குவோம்

– சுவாமி ஆ. லூயிஸ்.

“கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார்”, என்ற அழியாத அருள்வாக்கு, கடவுளின் திருவுளத்தையும், திருத்திட்டத்தையும் நாம் அனைவரும் நம்பிக்கையுடன் நிறைவேற்றவே, கடவுள் தனது உயிரை நம்மோடு பகிர்ந்து வருகிறார். அவர் அருளும் ஆவியில் நாம் இருப்பது இயங்குவது நமது அழைப்பாகும், இயல்பாகும் என்றாலும் நமது அனுபவங்கள் வினோதமாக இருப்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆவியில் இயங்குவது என்ற கலையை நாம் கற்றுக் கொள்வோம், கடைபிடிப்போம், கரை சேர்வோம்.

**நாம் யார்?:** கடவுளின் கனிவான திட்டத்தில், தனது உயிரை படைப்பில் பதித்து தனது சாயலைக் கண்டு இன்றும் பெருமிதம் கொண்டு வருகிறார். சாயலைச் சிதைத்த போதும், சினம் கொள்ளாமல் தனது மகன் வடிவிலே மீட்பிலே வியப்புக்குரிய விதத்தில் மேன்மைப்படுத்தி வருகிறார். மனிதம் + இறைவனுடைய சாயல்+ இயேசுவின் சீடர் இவைகளின் தொகுப்பாக மனிதம் மாட்சிமையோடு விளங்க, வாழ கடவுள் விரும்பி அழைத்துக் கொண்டிருக்கிறார். அவருடைய குரலுக்குச் செவிசாய்த்து வாழ்பவர், முயல்பவர், அறியாதோர் என்று மனித குலம் இன்று தன்னை வெளிப்படுத்தி வருகிறது.

சத்தியமான தனது சாயலையும், சித்தமான அவரது மகனையும் இணைத்து வெளிப்படுத்தினால் மனிதம் மகிழ்வோடு வாழும், ஆவியில் இருக்கும், இயங்கும், எழுந்திடும், பயணித்திடும். இதைப்படிப்பவர் தங்களையும் தங்களோடு இருக்கின்றவர்களையும் இப்பின்புலத்தில் பொருத்திப் பார்த்தால் நாம் யார் என்பதை அனுபவப்பூர்வமாகப் புரிந்துகொள்ள இயலும். போதனையைவிட சாதனை மேலானது, சக்தி மிகுந்தது, சவால் தொடுப்பது, அயலானைப் தொடுவது என்று களம் இறங்குவோம்.

**ஆவியும் உடலும்:** விண்ணகமும் மண்ணகமும் இணைந்தால் வெளிப்படுவது மாண்புமிகு மனிதம். இப்பேருண்மையைத் தான் வானதூதர் குடிலில் கண்டு வாழ்த்தி போற்றுகின்றனர்: “உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக, பூவுலகில் நன்மனத்தோருக்கு அமைதி உண்டாகுக.” நமது கண்களால் காண்பது எல்லாம் தற்காலிகமானது. புத்தியினால் காண்பதும் எல்லைகளைக் கொண்டது, நம்பிக்கையின் பார்வையோ நிலையானது. அதுவே ஆவியாகும், மற்றதெல்லாம் உடலாகும். உடல் கொஞ்ச காலத்திற்குரியது, ஆவியோ என்றும் உரியது. தற்காலிகமானதை நிரந்தரமாக, நிரந்தரமானதை தற்காலிகமாகப் பற்றிக் கொண்டு வாழும் தனது சகோதரிகட்கும் சகோதரர்கட்கும், இயேசு கல்வாரியில் கனிவோடு வேண்டுகிறார். “பிதாவே இவர்களை மன்னியும். ஏனெனில் இவர்கள் செய்வது இன்னது என்று அறியாமல் செய்கின்றனர்.” “உங்கள் மனம் ஆர்வமுடையதுதான், ஆனால் உடல் வலுவற்றது” என்று இயேசு எல்லாரையும் கருணையோடு புரிந்து கொண்டு விழித்தெழ அழைத்துக் கொண்டிருக்கிறார். விழிப்புணர்வுக்கு ஏற்றவாறு வாழ்வு வளம் பெறுகிறது, அல்லது வரட்சி உறுகிறது. நாம் யார் என்பதை சீராக உணர உணர ஆவியின் உணர்வு நம்மில் அதிகமாகும், உடல் உணர்வு ஆவிக்கு உடன்படும், அப்போது நமது வாழ்வும் நலம் பெறும். உடலை மேம்படுத்ததான் இயேசு உடலை எடுத்து நமக்கு அன்றாட விருந்தாகத் திருப்பலியில் தானமாக தன்னைத் தந்து கொண்டிருக்கிறார். இதனால் கடவுளின் உடலான படைப்பும், இயேசுவின் மறை உடலான திருச்சபையும், நமது குழுவும் நாமும் கட்டி எழுப்பப்படுகிறோம் என்று உணர்ந்து நாளும் உயர்வோம்.

**உடலும் உள்ளமும்:** உடலும் உள்ளமும் தானாக செயல்பட முடியாது, ஆவியின் ஆற்றல் இருந்தால்தான் செயல்படும். இறந்த உடலில் எவ்வித செயல்பாடும் இல்லை என்பது நமக்குப் புரியும். வாழ்க்கை என்னும் நாடகத்தில் கடவுள் அருளும் உயிரைப் பெற்று, அதன்படி செயல்படாமல், உயிரைப் பயன்படுத்தி உடலும் உள்ளமும் வாழ்வை மேற்கொள்ளும் போதுதான், அந்த வாழ்வு பயனற்றது என்பதை உணராமல் நமது வாழ்வு கால ஓட்டத்தில் கடந்து போகிறது. எனது உடல் ஆசை, எனது உள்ளத்தின் விருப்பம் என்று நாம் வாழும் போதெல்லாம் நம்மிடம் கடவுளின் நம்பிக்கை பலவீனமாகிறது. ஆனால் அவருடைய விருப்பம், அவருடைய திட்டம் என்று உணர்ந்து வாழும் போதெல்லாம் நமது வாழ்வு புனிதமாகிறது. இப்போராட்டத்தில் என்ன செய்வது என்று இதயம் ஏங்கினால், எனது அருள் உனக்குப் போதும் என்ற அன்பான பதிலைப் பெறுவோம். சோதனையில் இருந்து விடுதலைப் பெற வேண்டுவோம்.

உடலும் உள்ளமும் உயிரின் கருவிகள். கருவிகள் கருவிகளாக இருந்து இயங்கினால் நல்லது, மாறாக கருவியே கர்த்தாவாக செயல்பட்டால் சோதனை மேல் சோதனை போதுமெடா சாமி என்று புரியாமல் சாமியிடம் முறையிடுவோம். சாமி தவறு செய்யவில்லை. நமது தவறுகளுக்காக தனது இரத்தத்தை ஊற்றி குணப்படுத்திக் கொண்டு வருகிறார். உனது தவறுக்கு நீயும், மற்றவர்களும் தான் காரணம், எனவே தன்னையும் தன் அயலானையும் செம்மைப்படுத்த நமக்கு உரிமையும் கடமையும் உண்டு. நாம் ஓர் அடி எடுத்தால் அவர் ஓன்பது அடி எடுத்து நம்மை உயர்த்திட உயிர்த்த ஆண்டவர் நம்மோடு இருக்கிறார்.

**இயங்கப்படுவோம்:** ஆவியால்தான் இயேசு இயங்கப்பட்டு வருகிறார். எனவேநாம் இயங்குவதைவிட, இயங்கப்படுவது மேலானது. நாம் இயங்காமல் இருக்க உடலையும் உள்ளத்தையும், புலன்களையும் புத்தியையும் அமைதி படுத்தினால், ஆவி நம்முள் பொங்கி எழுந்து நம்மை சரியானப் பாதையில் இயங்க வைக்கும். சுயநலம், பதவி, பட்டம், இனம், சாதி, பணம், செல்வாக்கு, சௌகரியம், அயல்நாடு, உள்நாடு இவைகள் எல்லாம் ஆவிக்கு முன் மேலானது இல்லை. இன்னமும் கிறிஸ்தவர்களாகிய நாம் இவைகளைப் பற்றிக் கொண்டு பிளவுபட்டு போராடுவதில் கடுகளவும் பயன்இல்லை என்று சொல்ல வேண்டிய திரு ஆட்சியாளர்கள், துறவிகளே முன் நிற்பதில் பொருளும் இல்லை, பொருத்தமும் இல்லை, இவைகளைத் திருச்சபையில் அமைப்புகளாக ஏற்படுத்தி அடிமை வாழ்வை மேற்கொள்வதையும் நாம் உணர்வதில்லை. உயிர்த்த ஆண்டவரின் ஒப்பற்றப் பார்வையில் புதியப் படைப்பு, தொடர் மீட்பு, தொடர் புனிதம் என நாம் திட்டமிட்டு பயணிக்க முயன்றால் இன்று நாம் காணும் திருச்சபை, இறையரசின் அடையாளமாகத் திகழும் வெற்றித் திருச்சபையாகும் அல்லவா? கடவுளின் திருவுளத்தையும் திட்டத்தையும் அதிகாரப்பூர்வமான திருச்சபையின் போதனை வழியாக வருவதை நாம் அனைவரும் ஏற்று நம்பிக்கையோடு செயல்பட்டால் ஒவ்வொரு தலத்திருச்சபையும் மலர்ந்து மகிழும். பொதுத் திருச்சபை சான்று பகரும், இறையரசு நோக்கி ஏனையரோடு பயணம் செய்வோம். உமது அரசு எங்கும் வருக! ●



# யேசுவின் தர்க்கவாதம்

*சிந்தனை செல்வர் பேராசிரியர் அ. குழந்தைராஜ், காரைக்குடி*

**இ**யேசு கிறிஸ்து ஒப்படைத்த நம் இயக்கப் பணிகளில் நம்மோடு பரிசுத்த ஆவியானவர் ஒத்துழைக்கிறார். தம் திருத்தூதர்களை அனுப்புமுன் இயேசு பரிசுத்த ஆவியான வரின் வல்லமை நிறைந்த அபிஷேகத்தைத் தருகிறார். இன்றும் அது நடைபெறவேண்டும். திருமுழுக்கு எனும் அருட் சாதனத்தின் வழியாக எல்லாரும் நற்செய்தி அறிவிக்கக் கடமைப்பட்டிருந்தாலும், அதை உறுதியாய், எளிமையாய், அதிகாரத்தோடு பணிபுரிய பொதுநிலையினர் அழைக்கப் படுகின்றனர். திருத்தூதர் பணியில் நாம் காண்பதென்ன? அதிகாரம் 1 முதல் 7 வரை எருசலேமிலிருந்து யூதேயா வரையிலும், அதிகாரம் 8 சமாரியாவிலும், அதிகாரம் 9 முதல் 12 வரை பிற இனத்தவர்க்கும், அதிகாரம் 13 முதல் இறுதிவரை உலகின் கடையெல்லைக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. இயேசுவும் இந்த வரிசைப்படித்தான் நற்செய்தி அறிவிக்கக் கூறினார். "தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும், யூதேயா சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர் கள்" என்றார். (தி.ப.1:8) சீடர்களும் சிறப்பாக பேதுருவும் பவுலும் அப்படியே செய்தார்கள். நற்செய்திப் பணியில் இந்தச் சூழலில் யார் யார் எந்தெந்தப் பகுதியில் நற்செய்திப் பணி செய்திடலாம் எனப் பார்ப்போம்.

1) முதல் நிலையில் பொதுவாக திருமுழுக்குப் பெற்ற எல்லாக் கிறிஸ்தவர்களும், திருவருட்சாதனம் பெற்றதின் வழியாக அந்த உரிமையைப் பெற்றவர்கள். ஆனால் இவர்கள் நற்செய்தி அறிவிக்கலாமே தவிர, அதிகாரப்பூர் வமான மறைபரப்புப் பணியைச் செய்ய முடியாது, செய்யவும் அனுமதி இல்லை.

2) இந்தப் பணியை மேலும் சிறப்பாகச் செய்ய தலத்திருச்சபையாக வட்டார, மாநில திருச்சபைகள், தங்களுக்கே உரித்தான அருங்கொடைகள், வரங்கள் மூலமாக தங்கள் பகுதிகளில் நற்செய்திப் பணியையும் மறைபரப்புப் பணியையும் செய்திடலாம்.

3) (எரே.23:2) ஆயர்கள் மந்தையைச் சிதறடிக்காமல் ஒன்று சேர்த்து, குறிப்பாக திருத்தந்தையின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் நம் ஆயர்கள், பேதுருவின் வாரிசாக இருந்து பணியை மேற்கொள்ளல்.

4) தற்போது அந்தப் பணி கடைசி நிலையில் உள்ள பங்குப் பணியாளர்கள், துறவிகளுக்குப் போய் சேர்ந்து அவர்கள் தாங்கள் பெற்ற அர்ச்சிப்பால் அபிஷேகத்தால், இப்படிப்பட்ட பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. ஆனால் சில இடங்களில் திருப்பலி, மறையுரை, திருவிழா என்ற குறுகிய வட்டத்துக்குள்ளாகவே முடங்கி விடுகிறது. இந்த ஸ்தம்பித்த நிலையைப் போக்க ஒரே வழி பொதுநிலை யினருக்கு இந்த அதிகாரத்தை வழங்குவதுதான்.

5) தற்போது பொதுநிலையினர் தங்களுக்குக் கொடுக்கப் பட்ட 1) அர்ச்சிக்கும் பணி 2) ஆளும் பணி 3) போதிக்கும் பணி என்ற முப்பெரும் பணிகளைச் செய்ய அழைக்கப் படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட சிலர் திருப்பணியாளர் களாக அங்கீகரிக்கப்படுகிறார்கள்.

- தொடரும்...

75 இளம் உள்ளங்களுக்கு

# ஆனந்தம் நம் கையில்

– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.



**செல்வ சீமாட்டியின் கவலை:** ஓர் அழகிய செல்வ சீமாட்டி தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டு மனநோய் மருத்துவரிடம் வந்தார். தனக்கு நிம்மதியோ, மகிழ்ச்சியோ இல்லை என்றும் தன் வாழ்க்கை வெறுமையாகி விட்டதாகவும், அர்த்தமில்லாததாகி விட்டதாகவும் மிகவும் வருந்தினார். அவர் சொல்வதை கவனமுடன் கேட்டுக் கொண்டிருந்தார் அந்த மனநோய் மருத்துவர். அப்போது அந்த அறையை சுத்தம் செய்து கொண்டிருந்த நடுத்தர வயது பெண்ணை அழைத்தார். பின்பு அந்த செல்வ சீமாட்டியிடம், "இவர் பெயர் ரெஜினா. இவர் வாழ்விலும் புயல் வீசியது. ஆனாலும் துவண்டு விடாமல் மீண்டு எழுந்தவர். இவர் தன் துக்கத்தை எப்படி சந்தோஷமாக மாற்றினார் என்று விவரிப்பார். கவனமாகக் கேளுங்கள்" என்றார்.

**ரெஜினாவின் சோகக் கதை:** ரெஜினா மனநோய் மருத்துவர் அழைப்பிற்கிணங்க அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்து தன் சொந்த கதையை சொல்லலானார்: "நான், என் கணவர், என் மகன் என்று மகிழ்ச்சியான குடும்பமாக வாழ்ந்தோம். அப்போது திடீரென்று டெங்கு காய்ச்சலுக்கு என் கணவர் பலியாகிவிட்டார். அடுத்த மூன்று மாதங் களில் ஒரு சாலை விபத்தில் என் மகனையும் இழந்தேன். எனக்கென்று யாருமில்லை. என்னால் நிம்மதியாக உண்ணவோ, உறங்கவோ முடியவில்லை. என்னால் சிரிக்கவோ, சிந்தித்து செயல்படவோ முடியவில்லை. மொத்தத்தில் மகிழ்ச்சி என்னிடமிருந்து விடைபெற்றுக் கொண்டது. என் வாழ்க் கையை முடித்து கொள்ளலாம் என்று கூட நினைத்தேன்.

**மாற்றம் தந்த பூனைக்குட்டி:** ஒரு நாள் மாலை வீடு திரும்பியபோது பின்னாலேயே ஒரு பூனைக்குட்டி வந்தது. என்னை அறியாமல் அதன் மேல் அனுதாபம் ஏற்பட்டது. எனவே, அதனை வீட்டிற்குள் அனுமதித்தேன். ஒரு கிண்ணத்தில் பால் ஊற்றி வைத்தேன், அது உடனே பாலை நக்கி குடித்துவிட்டது. பிறகு என் கால்களை பற்றி விளையாட ஆரம்பித்தது. பல மாதங்களுக்கு பிறகு முதன்முறையாக சிரித்தேன். என் உள்ளத்தில் ஒரு ஒளி ஏற்பட்டது. ஒரு பூனைக்குட்டிக்கு செய்த உதவியால் எனக்கு மகிழ்ச்சி கிடைத்தது என்றால், தேவையிலிருப்போருக்கு உதவினால் பெரும் மகிழ்ச்சி கிடைக்கும் என்று நம்பினேன். அடுத்த நாளே வீட்டிற்கு அருகில் நோய்வாய்பட்டிருந்த ஒருவருக்கு பிஸ்கட் மற்றும் உணவு பொருள் கொண்டுபோய் கொடுத்தேன். அவர் புன்னகையுடன் நன்றி சொன்னது எனக்கு ஊக்கமளித்தது. அன்றிலிருந்து என்னால் முடிந்த சிறு உதவிகளை பிறருக்கு செய்து சந்தோஷப்பட்டேன். இன்று என்னைவிட மகிழ்ச்சியாக யாரும் இருக்க முடியாது.

**மாற்றம் கண்ட சீமாட்டி:** இதை கேட்ட அந்த சீமாட்டியின் மனதில் மாற்றம் ஏற்பட்டது. அவளிடம் செல்வத்தால் வாங்கக்கூடிய எல்லாமே இருந்தது. ஆனால் தன்னுடைய அறியாமையால் செல்வத்தால் வாங்க முடியாத உள்ளத்து மகிழ்ச்சியை இழந்துவிட்டதை எண்ணி வருந்தினார். வாழ்க்கையின் அழகு நீ எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறாய் என்பதில் அல்ல, உன்னால் மற்றவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதில் இருக்கிறது. மகிழ்ச்சி என்பது முடிவல்ல, அது ஒரு சங்கிலித் தொடர். ●



# ஆவியானவரின் தெய்வப் பணிகள்

–Dr. அ. மதலைமுத்து, புதுவை–3.

**கடவுளின் மக்கள்:** தந்தை கடவுளும், மகன் கடவுளும், தூய ஆவி கடவுளும் உடல் நிலை இருப்பு உடையவர்கள் அல்ல, மாறாக ஆவிநிலை இருப்பு அதாவது கடவுள் தன்மை இருப்பு உடையவர்கள். தனித்தனி ஆள் தன்மை உடையவர்கள் எனினும் ஒரே கடவுள் தன்மை இருப்பு உடையவர்கள். துவக்கத்திலிருந்து உலகங்கள் உள்ளவரை, தந்தை கடவுளோடும், ஆண்டவர் இயேசுவோடும் இருந்து, இயங்கி, நம் வாழ்க்கையிலும், திருஅவை வாழ்க்கையிலும், பலவித தெய்வ பணிகளையாற்றி வருகிறார். தூய ஆவியார் நமக்கு வழிகாட்டியாகவும் வழி நடத்துபவராகவும் இருக்கிறார். "உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்... முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்." (யோவா.16:13) அவ்வாறு, "கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள்" (உரோ.8:14).

**ஆவியாரின் வல்லமை:** உலக படைப்பின் துவக்கத்திலேயே ஆவியானவர் கடவுளோடு இருந்தார். "தொடக்கத்தில் கடவுள், விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்த பொழுது... நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது." (தொ.1:1,2) "வானதூதர அவரிடம் (மரியா), "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும்" என்று அறிவித்தார் (லூக்.1:35). புனித பேதுரு இயேசு கிறிஸ்துவின் திருப்பணிகளில் தூய ஆவியானவரின் வல்லமை இருந்ததை இரத்தின சுருக்கமாக கூறியுள்ளார். "கடவுள் நசரேத்து இயேசுவின் மேல் தூய ஆவியாரின் வல்லமையைப் பொழிந்தருளினார். கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார். நாமும் சாத்தானை எதிர்கொள்ள, நன்மைகளை பொதுநலத்தோடு செய்ய, தூய ஆவியாரின் வல்லமை அவசியமாகும்.

**உயிர்த்தெழுதலில் ஆவியார்:** இயேசு கிறிஸ்து தம்மையே தந்தை கடவுளிடம் ஒப்படைத்தார். "என்றுமுள்ள தூய ஆவியினால் தம்மைத் தாமே கடவுளுக்கு மாசற்ற பலியாக கொடுத்தவர் அவரே (இயேசுவே)" (எபி.9:14). இயேசு கிறிஸ்து, "தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் வல்லமையுள்ள இறைமகன்" (உரோ.1:4) தந்தை கடவுள், தூய ஆவியானவரால் இதை மகன் இயேசுவை இறப்பிலிருந்து எழுப்பினார். "இவர் (இயேசு) இறந்து உயிர்த்தெழுதலால் இந்த உண்மை, நிலை நாட்டப்பட்டது." (உரோ.1:4) நாமும் உயிர்த்தெழ வேண்டும், தூய்மையில் மீண்டும் பிறக்க வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார்.

**ஆவியாரின் ஆற்றல்:** பெந்தக்கோஸ்து நாளன்று திருத்தூதர்கள் மீது ஆவியானவர் அக்னி நாக்கு வடிவத்தில் இறங்கினார். பிறகு, பேதுரு, இயேசு கிறிஸ்துவைப் பற்றி சிறப்பாக போதிக்கத் துவங்கினார் (திரு.தூ.2:1-11). இறைமகன் வழியாக தூய ஆவியானவரால் தந்தை கடவுளிடம் செல்ல இயலும். "அவர் (இயேசு) வழியாகவே... நாம் ஒரே தூய ஆவி மூலம் நம் தந்தையை அணுகும் பேறு பெற்றிருக்கிறோம்" (எபே.2:18). மேலும், "அவர் (இயேசுவோடு) இணைந்து தூய ஆவி வழியாகக் கடவுளின் உறைவிடமாக கட்டப்பட்டு வருகிறீர்கள் (வரவேண்டும்)" (எபே.2:22). ஆகவே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக கடவுளில் வாழ, தூய ஆவியாரின் ஆற்றல் தேவையாகிறது.

**ஆற்றல் வாய்ந்தவர்:** நம் ஆண்டவர் இயேசு, தாம் விண்ணேற்றம் மேற்கொள்ளுமுன் திருத்தூதர்களை திடப்படுத்துகிறார். "நான் விண்ணுலகிற்கு தந்தையிடம் செல்வேன். அங்கிருந்து துணையாளர் தூய ஆவியாரை உங்களுக்காக அனுப்புவேன்" என்றார். ஆகவே, நம் கிறிஸ்துவ நல் வாழ்க்கைகாக இப்பொழுது இயேசு கிறிஸ்து வான்வீட்டில் இருக்கிறார். தூய ஆவியார் உலகில் நம்மோடு இருக்கிறார். "நான் போகாவிட்டால் துணையாளர் உங்களிடம் வரமாட்டார். நான் போனால், அவரை உங்களிடம் அனுப்புவேன்." (யோவா.16:7) என்கிறார் இயேசு. ஆகவே, தூய ஆவியார் கடவுளின் தனிப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட, அதிகாரப்பூர்வமான பிரதிநிதியாக உலகில் நம்மோடு இருக்கிறார். தூய ஆவியார் மூலமாக நாம் ஆண்டவர் இயேசுவோடு மிக நெருக்கமாக இருக்க முடியும். நாமாக கிறிஸ்துவ வாழ்க்கையை அன்புமயமாக, மற்றும் தூயதாக வாழ முடியாது. இந்த சீரிய முயற்சியில் ஆவியார் நமக்கு வழிநடத்து கிறவராகவும் வல்லமை தருபவராகவும் திகழ்கிறார்.

**ஆண்டவரின் ஆவியார்:** ஆண்டவராக ஆவியானவரை ஏற்றுக் கொள்ளாமல், ஆண்டவராகிய இயேசுவை ஏற்றது உண்மையாகாது. கத்தோலிக்க திருஅவை, இயேசு கிறிஸ்துவையும், தூய ஆவியாரையும் கடவுளாக விசுவசித்து அறிக்கை செய்கிறது. ஆவியாரை ஆண்டவராக ஏற்கிற பொழுது அறியாமை, சடங்கு,விதண்டாவாதம், உள்நோக்கம், நோய், சாத்தான் போன்றவைகளிலிருந்து விடுதலை பெறுகிறோம். வெறும் ஆட்டம், பாட்டு, கூச்சல் மனப்பான்மைகளுக்கு அடிமையாக மாட்டோம். ஆனால், ஆவியானவருள் நாம் மூழ்கி எழுந்தால், திருப்பாடலும், மகிழ்வாடலும் சாத்தியமே. அதே சமயம், போலித்தனத்தால் தூய ஆவியாரை நோகச் செய்யாதீர்கள். "இங்கே ஆண்டவர் என்பது தூய ஆவியாரைக் குறிக்கிறது. ஆண்டவரின் (கடவுளின்) ஆவியார் இருக்குமிடத்தில் விடுதலை உண்டு" (2கொரி.3:17) என பவுலடிகளார் சுட்டி காட்டுகிறார்.

**ஆவியாரின் ஆலயம்:** தூய ஆவியார் திருஅவையில் நிறைந்திருக்கிறார், மேலும் நம் ஒவ்வொருவரிலும், தனித்தனியாக, நிரம்பி வாழ விழைகிறார். கடவுள் நம் உடலை தூய ஆவியாருக்கும் திருக்கோயிலாக வழங்க வேண்டுமென்று விரும்புகிறார். "நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா?" (1கொரி.16) என திருத்தூதர் பவுல் வினவுகிறார்.

**திடப் படுத்துகிறவர்:** தூய ஆவியார், ஆண்டவர் இயேசுவின் இறை பணியை நிறைவு செய்கிறார். ஆவியானவர் திருத்தூதர்களுக்கு தேவையான தைரியம், ஞானம், ஆற்றல், நம்பிக்கை, அன்பு, நிதானம், எளிமை, மற்றும் தெய்வ பயத்தை வழங்கி, பயிற்சியளித்து, இயேசு கிறிஸ்து நற்செய்தி அறிவிப்பு பணிக்காகத் தேர்வு செய்த திருத்தூதர்களை வளப்படுத்தினார். நம் வாழ்க்கையில் நம்மையும் வெற்றியாளராக்குவார். திருத்தூதர்கள் இறுதி இரவு உணவு தருணத்தில் கூட அச்சம், குழப்பம், மற்றும் சந்தேகம் மேலிட்டவர்களாகத் தானே இருந்தார்கள்? திடப்படுத்துகிறவரை இயேசுவே நமக்காக அனுப்பினார் நண்பர்களே.

---

### ஜெபம் கலந்த ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறோம்

அரசக்குழி பங்கு தந்தை அருட்திரு. S. அல்போன்ஸ் அவர்களின் சகோதரர் திரு.**ஜான் பெரியநாயகம்** ஆசிரியர் (வயது 70) அவர்கள் 01-05-2018 அன்று இறையடி சேர்ந்தார். 02-05-2018 அன்று மாலை 4.00 மணி அளவில், கோவிலானூர் புனித கார்மேல் அன்னை பங்கு ஆலயத்தில் இடம்பெற்ற அடக்கச் சடங்குதிருப்பலியை அருட்தந்தை S. அல்போன்ஸ் அவர்கள் தலைமையேற்றார். இருபத்தைந்து அருட்தந்தையர்கள் இக்கூட்டுத்திருப்பலியில் இணைந்தனர். அருட்சகோதரிகளும், ஏராளமான இறைமக்களும் இத்திருப்பலியில் பங்கேற்று இறையடி சேர்ந்த அடியாருக்காக செபித்தனர். திருப்பலிக்குப்பின், மாலை 6 மணிக்கு கோவிலானூர் கல்லறையில் அன்னாரது நல்லடக்கம் நடைபெற்றது. சகோதரரை இழந்து துயருறும் அருட்தந்தை S. அல்போன்ஸ் அவர்களுக்கும், உடன் பிறந்தோருக்கும் குடும்பத்தார் அனைவருக்கும், உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து செபிக்கிறோம். இறையடி சேர்ந்த திரு. ஜான் பெரியநாயகம் ஆசிரியர் அவர்களின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாற்றி அடைவதாக. - ஆசிரியர்.

---

### வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

❊ சர்வவியாபி இதழில் விளம்பரம் கொடுக்க விரும்புவோர் குறைந்தது பத்து நாட்களுக்கு முன் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

❊ 2018 - ஆம் ஆண்டுக்கான சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும்.

- ஆசிரியர், சர்வவியாபி.



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



## 19ஆம் படலம்

யாவே கடவுளின் கட்டளைப்படி மோசே, அடுப்பிலிருந்து சாம்பலை வாரிக்கொண்டு, பார்வோன் முன்னிலையில் சென்று நின்று வானத்தில் அதைத் தூவினார். எகிப்து நாடெங்கும் அது மெல்லிய தூசியாகப் பரவி, மனிதர் மேலும் அது வெடித்துப் புண்ணாகக் கூடிய கொப்புளங்களாக மாறி, எல்லா எகிப்தியரையும் வருத்தும் இறைவன் அனுப்பிய ஆறாம் வாதையாக வந்தது. எனினும் அவ்வாதை இசுரயேலரை வருத்தவில்லை.

21 **அக்காலத்தில் எகிப்திய இனத்தார், இயற்கைப் படைப்பாகிய பசுவையும், பாம்பையும், எருதையும், கன்றுக்குட்டியையும் வழிபடும் பழக்கம் உடையவர்களாக இருந்தார்கள்.**

பழக்கம் வழக்கம் என்றாலும்
பகுந்தறிந் துண்மை பார்க்காமல்,
முழக்கம் செய்யும் இடிதன்னை,
முட்டிக் கொல்லும் எருததனை,
புழுங்கப் பழகும் நாய்தன்னை,
போற்றி வளர்க்கும் மரந்தன்னை,
வழக்கம் என்றே எகிப்தியர்கள்
வணங்கித் தொழுதே வாழ்ந்தார்கள்.

22 **உண்மைக் கடவுள் ஒருவரே என்பதையும், அவர் ஒருவரே அனைத்தையும் படைத்து, காத்து, ஆண்டு நடத்துகின்றவர் என்பதையும் அறியாமல் பல தெய்வ வழிபாட்டினராய் எகிப்தியர் வாழ்ந்தார்கள்.**

உண்மைக் கடவுள் என்றொருவர்
உள்ளார் என்பதை உணராமல்,
விண்ணும் மண்ணும் நீர்தானும்,
வீசும் காற்றும் தீதானும்,
கண்ணால் கண்டும் காணாதும்,
காத்தே அழிக்கும் இவையெல்லாம்
மண்ணில் வாழ வைப்பனவாய்
மதித்தே வாழ்ந்தார் அவர்எல்லாம்.

23 **யாவே கடவுள் ஒருவரே எல்லா வல்லமையும் கொண்டவர் என்பதை எகிப்தியர் உணர்ந்து கொள்ளவே, தம் அரும் செயலால் வாதைதரும் கொப்புள நோயைத் திடீரென்று அவர் எங்கும் பரவச் செய்தார்.**

எல்லாம் வல்ல இறைவனுக்கு
எவையும் படைப்பில் இணையாக
இல்லை என்னும் பேருண்மை
எகிப்தில் வாழ்ந்தார் உணர்ந்தேற்க,
தொல்லை தரும்பல வாதைகளும்
தோன்ற வைத்தவர் யாவேதாம்!
மல்லுக் கட்டும் பார்வோனோ
மதித்திவர் ஏற்க மறுத்தானே!

24 **பார்வோனுக்குரிய தண்டனையாக வந்த கொப்புள நோயை எப்படியாவது தன் பலத்தாலும், தன் முனைப்பாலும் தவிர்க்க முடியுமா என்று வெறுங்கையால் முழம்போட நினைத்தான் பார்வோன்!**

வெறுத்து மன்னன் மனப்பாங்கை,
விரைந்து பரவி கொப்புளநோய்,
வறுத்து எடுக்க யாவேதாம்
வந்திடச் செய்தார் எகிப்தெங்கும்!
ஒறுக்க வந்த நோயதனை,
ஒழித்துக் கட்டும் நோக்கோடு,
வெறுங்கை ஆளாய் மாமன்னன்
விழித்துப் பழித்து ஆய்ந்திட்டான்!

25 **அரசனுக்கு உதவும் மந்திரவாதிகளையே கொப்புளநோய் வருத்தியதால் அவர்கள் செயலற்றுத் தெய்வங்கள் உதவியை நாடி வேண்டியும், அவர்களும் யாவேயின் தண்டனைக்கு எதிராக எதுவும் செய்யும் ஆற்றலற்று இருந்தார்கள்.**

மந்திர வாதிகள் உடலெங்கும்
மாபெருங் கொப்புளக் கட்டிகளோ,
வந்தவர் வருந்தச் செய்ததனால்,
வாய்திறந் தவர்கள் மந்திரங்கள்
அந்தரம் நோக்கி உச்சரித்தும்
அவர்நோய் நீங்கா திருந்திடவே,
நொந்தவர் தெய்வம் தமையெல்லாம்
நோக்கியே நிந்தித் தழுதழைத்தார்!

- தொடரும்..

# அழிப்பது சுலபம்; கட்டுவது கஷ்டம்

–G. *பொனிபாஸ் ஜூலியன்,* புதுவை–9.



**ஊ**ரிலே ஒரு பெரியவர் இருந்தார். அவருக்கு மனைவி மக்கள் இருந்தார்கள். நன்கு படித்தவர். நேர்மையானவர். தவறே செய்யாதவர். அதுமட்டுமல்ல, அவர் எப்போதும் நியாயத்தை விரும்புவார். அநியாயத்துக்கு இடம் கொடுக்க மாட்டார். அநீதி நடக்கும் இடத்துக்கு சென்று அதை தட்டி கேட்பார். யாருக்கும் பயப்படாதவர், நேர்மையானவர், சில சமயங்களில் அவர் ஓட்டலுக்கு செல்வது வழக்கம். ஓட்டலுக்கு எப்போதாவது போவது தவறில்லை. ஆனால் அடிக்கடி செல்வது உடல் நலகேட்டுக்கு ஆளாக வேண்டிவரும். ஒரு சமயம் இந்தப் பெரியவர் ஓட்டலுக்கு சென்று தனக்கு என்னென்ன வேண்டும் என்பதை தெரிவித்தார். ஒவ்வொரும் உணவு வரும் போது அதை ரசித்து உண்டார். உணவு அருந்திய பின் தன் மனத்திற்குள், ஒரு கணக்குப் போட்டார். அது எவ்வளவு பில் என்று. அதற்கு ஏற்ப பணத்தை எடுத்து தயாராக வைத்து கொண்டார். சர்வர் பில் கொடுத்தவுடன், அதை பார்த்து சற்று தயங்கினார். ஏனெனில் குறைவான அளவிற்கு பில் போடப்பட்டு இருந்தது இவருக்கு தெரிந்துவிட்டது. சர்வர் ஏதோ சில திண்பண்டங்களுக்கு பில் போடவில்லை என்பதால் இவருக்கு மனசு கேட்கவில்லை. உதாரணமாக ரூபாய் 70-க்கு சாப்பிட்டதை, சர்வர் 50 ரூபாய் என போட்டிருந்தார். இதை சர்வரிடமே கேட்டு விட்டார். பில் குறைவாக இருக்கிறது, சற்று யோசித்து பார்த்து பில் போடு என்று சொன்னார். சர்வருக்கு உடனே கோபம் வந்துவிட்டது. உங்கள் வேலையை பார்த்துக் கொண்டு போங்கள், பில் படி கல்லாவில் அமர்ந்திருக்கும் முதலாளியிடம் பணத்தை கொடுத்துவிட்டு செல்லுங்கள் என்றான். உடனே இந்த பெரியவர் கல்லாவில் அமர்ந்திருக்கும் முதலாளியிடம் செய்திகள் அனைத்தையும் மெதுவாக சொல்லிவிட்டு, இப்படி சென்றால், உன் ஓட்டல் நஷ்டத்தில் இயங்க ஆரம்பித்துவிடும் என்று கூறி வழிநடந்தார்.

இந்த பெரியவர், ஏறத்தாழ இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று கொண்டிருக்கும் போது, யாரோ ஒருவன் அவர் தோள் மீது கை வைத்ததை உணர்ந்தார். செல்வந்தர் திரும்பி பார்த்தார். அந்த சர்வர் கண்கலங்கியபடி நின்று கொண்டிருந் தார். உங்களால் எனக்கு வேலை போய்விட்டது. எப்படி குடும்பத்தை பாதுகாப்பேன் என்று கூறி அழுதார்.

தன்னால் அந்த சர்வருக்கு வேலை போனதை உணர்ந்த இந்த பெரியவர், உடனே அந்த ஓட்டலுக்கு சென்று, அந்த முதலாளியைப் பார்த்து, சர்வர் சார்பாக தான் மன்னிப்பு கேட்பதாகவும், மேலும் அந்தச் சர்வரை மீண்டும் வேலைக்கு அமர்த்தும்படி வேண்டி கொண்டார். இதை ஏற்று சர்வர் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டார். சர்வருக்கு நல்ல அறிவுரை கூறி அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.

செய்யும் தொழிலே தெய்வம் என்று சொல்வார்கள். மற்றவரை சந்தோஷபடுத்துவதற்காக பணிபுரிகின்ற இடத்தில் துரோகம் செய்யக்கூடாது. வேலை பிடிக்கவில்லையென்றால், அங்கேயே இருந்துகொண்டு தன் அலுவலகத்தைப் பற்றி மற்றவருக்கு தவறாக அறிவித்துக் கொண்டிருக்கும்போது, படுத்துக் கொண்டு எச்சில் துப்புவது போல் ஆகும். அது மார்பிலேதான் வந்துவிழும். வேலை செய்யும் அலுவலகத் துக்கு கெட்டப் பெயர் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படி செய்யவில்லையென்றால் நன்றிகெட்டவர் என்று பழி சொல்லுக்கு ஆளாகி விடுவர். யாருமே வேலை இல்லை என்று கதவை தாளிட்டபோது, இந்த நிறுவனம் தன்னை அழைத்து, வேலை கொடுத்ததை நன்றியுடன் நினைவு பெற வேண்டும்.●

## விண்ணக வாழ்வின் 9-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



அன்புத் திருவுருவே!
ஆருயிரே! அம்மா!
இணையில்லாப் பேரெழிலே!
ஈகையுடன் மிளிர்ந்தவரே!
உத்தமியாய் உற்ற துணையாய்
ஊக்கச் சாரல் ஆனாய் நீ!
எளிமையை ஏந்திக் கொண்டு
ஏசுபிரான் வழிநடந்தாய் நீ
ஐயமில்லை! வான்வீடு உனக்கே சொந்தம்
ஒருபோதும் மறப்பதில்லை உனை எங்கள் நெஞ்சம்
ஓங்கார நாதமாய்
ஔடத அமுதமாய்
உன் அமைதியை அகலாக்கி அன்பை திரியாக்கி
எம்மை ஒளிர செய்தாயே அம்மா! இனி அந்த ஒளியை
எங்கு காண்போம்!

### மரிய சூசையம்மாள் (எ) பாப்பாதாய் பத்மா

**மண்ணில் மலர்ந்தது: 07-08-1922**

**விண்ணில் மலர்ந்தது: 13-05-2009**

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
- யோவான்.11:25

**அன்பு பிள்ளைகள்**
**மகன், மருமகள், மகள்கள், மருமகன்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப்பேரன்கள், பேத்தி, மற்றும் உற்றார் உறவினர்கள்.**
புதுவை.

**திருப்பலி: 13–5–2018 காலை 6 மணிக்கு நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும், காலை 6.30 மணிக்கு புதுவை சென்மராக்கினி மாதா பேராலயத்திலும், மதியம் 12.00 மணிக்கு திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவிலும் திருப்பலி நிறைவேற்றப்படும்.**

## விண்ணக வாழ்வின் ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 18-10-1934



மறைவு: 20-05-2013

### அருட்தந்தை G. ஜேக்கப்

"அஞ்சாதே! முதலும் முடிவும் நானே. வாழ்பவரும் நானே. இறந்தேன்; ஆயினும் இதோ என்றென்றும் வாழ்கின்றேன்" திருவெளி.1:17-18

வானக தந்தையே! உம்மை போற்றுகிறேன் நற்கருணையின் பேரின்பமே உயிருள்ள ஊற்றே உறுதிதரும் ஆவியே என் அடைக்கலமே ஆறுதலே தேறுதலே போற்றி பணியை சிறப்பித்தவரே, என்னை கண்ணீர் சிந்தாமலும், கால்கள் இடறாமலும் நிலை தாழாமலும் காத்தவரே என் வீட்டை காத்தவரே, நன்மைகள் பலபுரிந்தவரே வழி நடத்தியவரே, ஆசியால் நிறைந்தவரே போற்றி, போற்றி, போற்றி!!!

**20.5.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 5.00 மணிக்கு மையனூர், புனித விண்ணரசி ஆலயத்திலும், காலை 6.00 மணிக்கு, நெல்லித்தோப்பு, புனித விண்ணரசி அன்னை ஆலயத்திலும் திருப்பலி நிறைவேற்றப்படும்.**

**பிரிவால் துயருறும்**
**தம்பி, தங்கை, உறவினர்கள்.**
**மையனூர்.**

## விண்ணக வாழ்வின் 4-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 14-03-1926



மறைவு: 14-05-2014

### திரு. ஷெர்மோன் ரோக் மனோ

Ancien Combattant

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக் காக 14–05–2018 திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு புதுவை, திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

**பிரிவால் துயருறும்**
**மனைவி: ஷெர்மோன் அல்போன்ஸ் மரி**
**மகன்கள், மகள், மருமகன், மருமகள்கள்,**
**பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.**
புதுவை.

## விண்ணக வாழ்வின் 6-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 12-02-1926



மறைவு: 15-05-2012

### திரு. A. தெய்வசகாயம்

Inspector Retd. Tamil Nadu Police, Chennai.

அன்பின் திருஉருவமே இறைவா! உமக்காக வாழ்ந்து, உம் வழியில் நடந்து உண்மை பாதையில் உமக்கு ஊழியம் செய்து, உம் தாயின் நம்பிக்கையில் வழிநடந்து நடமாடும் தொன் போஸ்கோவாக வாழ்ந்து ஏழை எளிய திக்கற்ற இளைஞர்களுக்கு இசையோடு சேர்ந்த நல்லொழுக்கத்தையும் நற்பண்புகளையும், ஊட்டி வளர்த்து பல நூறு குடும்பங்களுக்கு ஒளியேற்றிய எங்கள் இதய தீபம் ஞான தந்தை அமரர் தெய்வத்திரு A. தேவசகாயம் (தமிழ்நாடு காவல்துறை, Band Master) அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியையும், முடிவில்லா ஒளியையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**இப்படிக்கு**
**சீருடை பணியாளர்கள்,** BSF, ARMY, NAVY
**மற்றும் தமிழ்நாடு காவல்துறை.**

## விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம்: 15-06-1930



மறைவு: 18-04-2018

### திருமதி. S. மேரி ஸ்டெல்லா

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 17–05–2018 வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு கடலூர், புனித கார்மேல் அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படும் மரித்தோர் பாடல் திருப்பலியில் கலந்து கொண்டு ஜெபிக்க வேண்டுகிறோம்.

**பிரிவால் துயருறும் மகன்கள்**
S. **ஜோசப் மரிய லூயிஸ்,**
S. **பீட்டர்பால் இன்பராஜ்,** நெய்வேலி.
S. **மரிய பிரான்சிஸ் தனராஜ்,** ஆவடி.
S. **ஜார்ஜ் டேவிட்,** நெய்வேலி.
**மருமகள்கள், பேரப்பிள்ளைகள்.**

விண்ணக வாழ்வின்
3-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

விண்ணக வாழ்வின்
36-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி. **அனேத் மரிதெல்காஸ்**

திரு. **தொம்னிக் மரிதெல்காஸ்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தோற்றம் | : | 29-09-1939 | தோற்றம் | : | 16-12-1926 |
| மறைவு | : | 27-05-2015 | மறைவு | : | 04-03-1982 |

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவான்.11:25

மிகவும் பரிசுத்த கன்னிமரியே! உத்தரிகிற ஸ்தலத்து ஆத்துமங்களின் மீது இரக்கம் மிகுந்த தேற்றரவு மாதாவே! நாங்கள் உமது திருபாதத்தண்டையில் விழுந்து பிரார்த்தித்து கொள்வது என்னவெனில் எங்கள் செபங்களினாலும் அனுதினக் கிரிகை களினாலும் அடையக் கூடிய பேறுபலன்களை

திருமதி. **அனேத் மரிதெல்காஸ்**

திரு. **தொம்னிக் மரிதெல்காஸ்**

ஆத்துமத்துக்கு பிரயோசனமாக அவைகளைப் பிரயோகிக்க கிருபை புரிந்தருளும். மாதாவே உமது பேரில் பக்தியாக இருந்து மரித்த இவர்களின் ஆத்துமத்தின் பேரில் இரக்கம் வைத்து மோட்ச சம்பாவனை பெற்று தந்தருளும். - ஒரு கர்.மங்.திரி.

திருப்பலி: 27–05–2018 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு, புதுவை, நெல்லித்தோப்பு புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும், அரியாங்குப்பம், புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்திலும், சென்னை அயனாவரம், புனித தொன் போஸ்கோ ஆலயத்திலும், திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் வாடும்
**குடும்பத்தினர்**
**மற்றும் உற்றார், உறவினர்கள்.**
நெல்லித்தோப்பு.

---

இறைவனில் இணைந்த
15-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 28-02-1945



மறைவு: 17-05-2003

**ஜோசப் அனந்து** M.A.
Dy.Director, Dept.of Statistics, S/o. A. ANANDOU

ஆண்டவரே! இவருக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்! முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக! இவரது ஆன்மா சாந்தியடைய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

17-5-2018அன்று காலை 6.30 மணிக்கு புதுவை, ரெயின்போ நகர், புனித ஜான்மரி வியான்னி ஆலயத்திலும், காரைக்கால் புனித தேற்றரவு அன்னை ஆலயத்திலும் திருப்பலி நிறைவேற்றப் படும்.

பிரிவால் துயருறும்
தாய், மனைவி, மகன்கள்,
மருமகள்கள், பேத்திகள்,
சகோதரர்கள், சகோதரி
மற்றும் அனந்து குடும்பத்தினர்கள்
புதுவை, காரைக்கால்.

விண்ணக வாழ்வின்
13-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 8.11.1974



மறைவு: 23.5.2005

Mrs. **ஆனி சித்ரா அனந்து** B.A.B.L
(Daughter in law of late Joseph Anandou)

"என்னை அறிந்து நேசித்தவர்களே, மரணத்தில் என்னை மறவாதீர்கள்"
ஆண்டவரே! இவருக்கு நித்திய இளைப் பாற்றியை அளித்தருளும்! முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக! இவரது ஆன்மா சாந்தி யடைய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

23-5-2018 காலை 6.30 மணிக்கு புதுவை, ரெயின்போ நகர் புனித ஜான்மரி வியான்னி ஆலயத்தில் பாடல் திருப்பலி நிறைவேற்றப் படும்.

பிரிவால் துயருறும் கணவர்
**அனந்து ஜேம்ஸ்ராஜ்**
மகள்கள், சகோதரர், சகோதரி
அனந்து குடும்பத்தினர்.
புதுவை.

இறைவனில் இணைந்த
8-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 20-11-1950



மறைவு: 16-05-2010

திரு. L. **லப்பாஸ்**
**மரி பிலோமேன் பெலிசியன்**

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக் காக 16–05–2018 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு புதுவை, நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
மனைவி: **A. மரி ஜெயந்தி லப்பாஸ்**
நெல்லித்தோப்பு, புதுவை.

---

**நித்திய இளைப்பாற்றியை இவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே, முடிவில்லாதே ஒளி இவர்கள்மேல் ஒளிர்வதாக.**

தோற்றம்: 06-10-1946



மறைவு: 01-05-2018

## விண்ணக வாழ்வின் 16-ஆம் நாள் நினைவு அஞ்சலி

அன்பு இறைவா! என்றும் எங்களோடு இருந்து வழிநடத்தும் தந்தையே, உம் திருமகன் எங்களுக்கு வான்வீட்டின் கதவுகளைத் திறந்துவிட்டார், விசுவாசத்தோடு வாழ்ந்து மரித்த, எங்கள் இதயத்தில் வாழ்ந்திடும்

### திரு. S.ஜான் பெரியநாயகம்

அவர்கள் மீது இரங்கி, வான்வீட்டில் உம்மோடும், உம் புனிதர்களோடும் சேர்ந்து வாழ வரமருள்வீராக. - ஆமென். - கர்.மங்.திரி.

உடன் வருந்தும்

Rev.Fr.S. **அல்போன்ஸ்**
Rev.Sr.S. **லாரன்ஸ்**
S. **மரிய பிலோமினாள்** Tr.
**மகன், மகள்கள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.**

கணவரை இழந்து துயருறும்
மனைவி: **விமலா மரி**

### திரு. S.ஜான் பெரியநாயகம்

தலைமை ஆசிரியர்.

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
- யோவான். 11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 16-5-2018 காலை 10.00 மணிக்கு கோவிலானூர், புனித கார்மேல் அன்னை ஆலயத்தில் மரித்தோர் திருப்பலி நிறைவேற்றப்படும்.

---

பிறப்பு: 20-03-1947



மறைவு: 12-05-2017

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா! உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கைக் கொள்வோர் இறப்பினும் வாழ்வர்" (யோவான் 11:25) எனும், வாழ்வுக்கு ஊற்றான வார்த்தையை அருளியவரே! இவ்வாக்குறுதியை ஏற்று, நம்பிக்கையோடு வாழ்ந்தவருள் ஒருவராக, இப்போது உம் திருவடி சேர்ந்துள்ள

### திரு. மரி ஜோசப் பெனுவா மொர்லோ

அவர்களின் ஆன்மாவுக்கு நித்திய இளைப்பாறுதலையும் உமது முடிவில்லா ஒளியையும் அவர்மீது பொழிந்தருள வேண்டும் என பணிந்து உம்மை மன்றாடுகிறோம்.
- ஆமென்.

### திரு. மரி ஜோசப் பெனுவா மொர்லோ

பிரிவால் துயருறும்
மனைவி: **தெனிஸ் மொர்லோ**
**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதரர் மற்றும் குடும்பத்தினர்.**

குறிப்பு: அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 12-05-2018 காலை 6.15 மணிக்கு, புதுவை குருசுகுப்பம் புனித அசிசி ஆலயத்தில் நிறைவேற்றப்படும்.

**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய அமைதி அடைவார்களாக.**




**நவீன அடிமை முறைகள் குறித்து கை கழுவ அனுமதியில்லை:** அர்ஜென்டினாவின் புவனஸ் அயிரஸ் ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவ பெருமறைமாவட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தற்கால அடிமை முறைகள் என்ற கருத் தரங்கிற்கு, ஒலி-ஒளி செய்தியொன்றை அனுப்பியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். மனித உயிர்களை விற்பனைப் பொருட்களாக கடத்திச் செல்லுதல், மக்களை கடனாளி யாக்கி அவர்களின் உழைப்பைச் சுரண்டுதல், குழந்தை களை ஏமாற்றுதல், பாலுறவு முறையில் கொடுமைகளை இழைத்தல், கட்டாய வேலை வாங்குதல் என இன்றைய உலகில் எண்ணற்ற வகையில் அடிமை முறைகள் காணப் படுகின்றன என தன் செய்தியில் கூறும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இன்றைய உலகில், 4 கோடி பேர் அடிமைத் தொழிலில் துன்புறுவதாக கவலையை வெளி யிட்டுள்ளார். மனித குலத்திற்கு எதிராக இடம்பெறும் இத்தீமை குறித்து எவரும் தங்கள் கைகளை கழுவிட முடியாது என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்தீமை யின் முகத்திரை கிழிக்கப்படுவதோடு, பாராமுகம் எனும் போக்கு சமுதாயத்திடமிருந்து அகற்றப்படவேண்டும் என கேட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். - வத்.வானொலி

**இந்தியா: இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட் டோருக்கு இந்திய ஆயர்கள் உதவி:** மணல் சூறாவளி காற்றாலும், மழையாலும், பாதிக்கப்பட்டுள்ள இந்தியாவின் வடமாநிலங்களில் உடனடி அவசரச் சேவைகளைத் துவக்கி யுள்ள தலத்திருஅவை, தட்ப வெப்ப நிலை மாற்றங்கள் குறித்து, நாம் தீவிரமாக சிந்திக்க வேண்டிய நேரம் வந்துள்ளது என அழைப்பு விடுத்துள்ளது. வட இந்தியாவின் இராஜஸ்தான், உத்திரபிரதேசம் உட்பட 13 மாநிலங்களில் பெருமழை குறித்து எச்சரிக்கைகள் விடப்பட்டுள்ள நிலையில், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கென அவசரகால உதவிகளை காரித்தாஸ் இந்தியா துயர் துடைப்பு நிறுவனம் வழியாக துவக்கியுள்ள இந்திய ஆயர் பேரவை மணல் சூறாவளியாலும், பெரு மழையாலும் உயிரிழந் துள்ள ஏழத்தாழ 124 பேர், மற்றும் காயமடைந்துள்ள 300 பேர் குறித்து தன் ஆழ்ந்த அனுதாபங்களையும் செப உறுதியை யும் வழங்கியுள்ளது. மதம், இனம் என்ற எவ்வித பாகுபாடும் பார்க்காமல், பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் கத்தோலிக்க சுயவிருப்பப் பணியாளர்கள் சேவையாற்றி வருவதாக இந்திய ஆயர்கள் கூறுகின்றனர். - AsiaNews

## 12-ம் ஆண்டு நினைவு

தோற்றம்: 1910
மறைவு:14-5-2006



தோற்றம்: 1908
மறைவு: 29-1-1994

திருமதி. லூர்துமரி திரு. செல்வநாதன்

"வாழ்வு மாறுபடுகிறதே அன்றி அழிக்கப்படுவது இல்லை"

**இவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக 14–5–2018 அன்று கோவிலானூர் புனித கார்மேல் அன்னை ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும். இதை கண்ணுறும் அனைவரும் இவர்களது ஆன்ம சாந்திக்காக ஜெபிக்க வேண்டுகிறோம்.**

**நினைவுகூறும் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள்**

**Sr.லாரன்ஸ் செல்வநாதன், Fr. S. அல்போன்ஸ்,** அரசக்குழி.

Printed and Published on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore, by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.